பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
14 10 2024 MONDAY 7.15 PM
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அல்ஜீரியா அதிபர் Abdelmadjid Tebboune – வுடன் இன்று பேச்சு நடத்தினார்.

- போதைப்பொருள் புழக்கத்தை ஒழிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- நீர் சேமிப்பில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளை மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் இன்று அறிவித்தார். முதல் பரிசினை ஒடிஷா வென்றது.

- தமிழகத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி ஒரு இன்னிங்ஸ் 70 ரன் வித்தியாசத்தில் சௌராஷ்ட்ரா அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அல்ஜீரியா அதிபர் Abdelmadjid Tebboune – வுடன் இன்று பேச்சு நடத்தினார்.

அரசு முறைப்பயணமாக அந்நாட்டிற்கு சென்றுள்ள திருமதி திரௌபதி முர்மு, இருநாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவது தொடர்பாக அந்நாட்டு அதிபருடன் பேச்சு நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கறிார்.

அல்ஜீரியாவில் உள்ள இந்திய பொருளாதார அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திலும் குடியரசுத் தலைவர் பங்கேற்க உள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தில்லி காவல்துறையினர் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை பறிமுதல் செய்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

நீர் சேமிப்பில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளை மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் இன்று அறிவித்தார்

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீர் சேமிப்பில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் தனி நபர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன்படி, மாநில அளவில் முதல் பரிசை ஒடிஷாவும், இரண்டாம் பரிசை உத்தரபிரதேசமும் வென்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வரும் 22-ஆம் தேதி இவ்விருதகளை வழங்க உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

38 விருதுகள் இந்த விழாவில் வழங்கப்பட உள்ளதாகவும் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 400 எத்தனால் உயிரி எரிபொருள் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் உயிரி எரிபொருள் தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

உயிரி எரிபொருள் உற்பத்திக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக எத்தனால் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எத்தனால் விற்பனை நிலையங்கள் பொருளதார ரீதியாக லாபகரமாக இயங்குவதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டு மக்கள் அனைவருக்கும் உயர்தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைப்பதை இந்திய தர நிர்ணய அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக தர நிர்ணய தினத்தையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தர நிர்ணயம் தொடர்பாக பொதுமக்களிடையே கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச தரத்திற்கு இணையான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

வக்ஃப் மசோதா தொடர்பான நாடளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்தனர்.

இந்த கூட்டத்தில் கர்நாடக மாநில சிறுபான்மையின ஆணையத்தின் முன்னாள் தலைவர் திரு Anwar Mannippadi, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே-வுக்கு எதிரான சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்ததாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

இதன் காரணமாக இந்த கூட்டத்தை புறக்கணித்ததாகவும் அவர்கள் கூறினார்.

<<<<<<>>>>>>

தில்லியில் பட்டாசு உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடங்கி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதிவரை இந்த தடை அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி மாசு கட்டுப்பாட்டுக்குழு இதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ளது.

இணையதளம் வாயிலான பட்டாசு விற்பனைக்கும், விநியோகத்திற்கும் இந்த தடை பொருந்தும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல், தில்லியில் பட்டாசு வெடிப்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ளதாக அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள தில்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு கோபால் ராய், தில்லியில் காற்று மாசு அதிகரித்ததை கருத்தில்கொண்டு அதனை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு கோபால் ராய் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளதாக ஜம்மு காஷ்மீர் பிஜேபி தலைவர் திரு ரவீந்தர் ரெய்னா கூறியுள்ளார்.

இன்று ஜம்முவில் பிஜேபி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஜம்மு மண்டலத்தில் பிஜேபி சிறப்பாக செயல்பட்டுள்ளதாகவும் திரு ரவீந்தர் ரெய்னா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு Simon Johnson, James Robinson மற்றும் Daron Acemoglu-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களின் பொருளாதார வளர்ச்சிக்கான ஆராய்ச்சிப்பணிகளுக்காக அமெரிக்காவை சேர்ந்த பொருளாதார நிபுணர்களுக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் பாரத் நெட் திட்டத்தின் மூலம் இணையதள வசதி வழங்கப்பட்டு வருவதாக தொலைத்தொடர்புத்துறை இணையமைச்சர் திரு Pemmasani Chandrasekar கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்கீழ் விடுபட்ட கிராமங்களுக்கு அடுத்த மூன்றாண்டுகளுக்குள் இணையதள வசதி கிடைக்கும் என்றார்.

<<<<<<>>>>>>

ஆந்திர மாநிலம் அமராவதியில் ரத்தன் டாடா புத்தொழில் முனையம் ஏற்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்ட அவர், ரத்தன் டாடாவின் நினைவாக இந்த முனையம் ஏற்படுத்தப்படுவதாக குறிப்பிட்டார்.

மண்டல வாரியாக செயல்படும் மையங்களோடு இந்த முனையம் இணைக்கப்படும் என்றும் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் மருத்துவ சங்கத்திற்கும், மாநில அரசுக்கும் இடையே இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

பயிற்சி மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து, நடத்திவரும் உண்ணாவிரதப்போராட்டத்தை விலக்கிக்கொள்ளுமாறு அரசு சார்பில் இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக மருத்துவர் சங்க தலைவர் டாக்டர் உத்பால் பானர்ஜி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் பற்றி அரசுக்கு அக்கறை இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மருத்துவர்களின் கோரிக்கை இந்த கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டதாகவும் டாக்டர் உத்பால் பானர்ஜி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கோவிட்-19 தடுப்பூசியினால் பக்கவிளைவுகள் ஏற்படுவதாக கூறி, இதுகுறித்து வி சாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

பரபரப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில இந்த மனு தாக்கல் செய்யப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு நடுவர் மன்றத்தின் அமர்வு மதுரையில் வரும் 19-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எல் டி டி ஈ அமைப்பை சட்டவிரோத அமைப்பாக அறிவித்தது தொடர்பான விசாரணையை இந்த அமர்வு மேற்கொள்கிறது.

தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு மன்மீத் ப்ரீத்தம் சிங் அரோரா தலைமையிலான இந்த அமர்வு முன், சாட்சி அளிக்க விரும்புபவர்கள் அன்றைய தினம் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கக்கூடும் என்றார்.

ராமநாதபுரம் முதல், திருவள்ளூர் வரையிலான கடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழையும், டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு செந்தாமரை கண்ணன் கூறினார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி ஒரு இன்னிங்ஸ் 70 ரன் வித்தியாசத்தில் சௌராஷ்ட்ரா அணியை வென்றது.

கோவையில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, ஐந்து விக்கெட் இழப்பிற்கு 35 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய சௌராஷ்ட்ரா அணி 94 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

Gurjapneet Singh அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 367 ரன்னுக்கும், சௌராஷ்ட்ரா அணி 203 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன

-------------------

Almaty ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Arjun Kadhe – Rithvik Choudary இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 7-6 என்ற செட் கணக்கில் பின்லாந்தின் Patrik Niklas - இத்தாலியின் Marco Bortolotti இணையை வென்றது.

---------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டிக்கான வீரர்கள் ஏலம் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

*<<<<<<END>>>>>>*